## சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.58/2025 நாள்- 08.04.2026

**வா.சா.1. மனோஜ் கவாஸ்கர்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் மெக்கானிக்கல் இன்ஜீனியரிங் படித்து வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன் நான் இந்தியாவுக்கு 2024 ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் வந்தேன். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தேதியில் நான் இந்தியாவில் தான் இருந்தேன் என்று காட்டுவதற்கு என்னுடைய கடவுச்சீட்டை பார்த்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான் என் மனைவி வேலை பார்க்கவில்லை வீட்டில் தான் இருக்கிறார். என் மனைவிக்கு வேறு வருமானம் கிடையாது. பிரதிவாதி என் மனைவியிடம் எந்த மாதம் எந்த தேதியில் கடன் வாங்கினார் என்றால் 2023 ம் ஆண்டு 9 வது மாதம் கடன் வாங்கினார். என் மனைவியிடம் சுமார் ரூ.2 லட்சம் பிரதிவாதி கடன் வாங்கினார். நான் மாதமாதம் என் மனைவிக்கு கொடுத்த பணத்தை என் மனைவி கடனாக கொடுத்தார். என் மனைவி பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது நான் இந்தியாவில் தான் இருந்தேன் இந்த விவரத்தை என்னுடைய கடவுசீட்டை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான் என் மனைவியிடம் பெற்ற கடனுக்கு அசல் வட்டி கொடுக்கவில்லை. என் மனைவி கொடுத்த அடுத்த மாதம் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். என் மனைவி கொடுத்த கடனுக்கு அசல் வட்டி தொகை கொடுக்காத நிலையில் உடனடியாக நான் எதற்காக பணம் கொடுத்தேன் என்று கேட்டால் என் வீட்டில் வேலை பார்த்ததால் அவசர தேவைக்காக பணம் கொடுத்தேன். பிரதிவாதி என் வீட்டில் குழந்தைகளை பராமரிக்கும் தொழில் செய்து வந்தார். பிரதிவாதிக்கு மாதம் சம்பளமாக ரூ.8000/- கொடுத்தேன். ரூ.8000 சம்பளம் பெறும் பிரதிவாதிக்கு நானும் என் மனைவியும் சேர்ந்து ரூ.5 லட்சம்/- கடன் கொடுத்தோம் என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் வீட்டில் பசும்பொன் என்பவர் டிரைவராக அவ்வப்போது பணிபுரிந்து வந்தார். என் மாமனார் வட்டிக்கு தொழில் செய்யவில்லை. நான் வட்டிக்கு விடும் தொழில் செய்யவில்லை. நானும் என் மாமனாரும் வட்டி தொழில் செய்து வருகிறோம் என்றும் அந்த வட்டியை பசும்பொன் என்பவர் மூலமாக வசூல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அண்ணன் மகன் தான்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

மேற்சொன்ன பசும்பொன் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியை என்வீட்டில் என் மாமனார் தான் வேலைக்கு சேர்த்தார். பிரதிவாதியின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியும் முகவரி தெரியாது. பிரதிவாதியின் கணவர் யார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு 2 மகன்கள் என்று தெரியும். பிரதிவாதியின் பூர்வீகம் எது என்று தெரியாத போது பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு என் வீட்டில் வைத்து அய்யனார் என்பவர் எழுதினார். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டை பிரதிவாதி தான் வாங்கி வந்தார். அய்யனார் அப்பா பெயர் முகவரி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு எழுதும் போது என் வீட்டில் என் மனைவி, சாட்சிகள், பிரதிவாதி ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் அய்யனார் ரவி என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார்கள் ரவி என்பவர் முகவரி அப்பா பெயர் எனக்கு தெரியாது. வீடு தெரியும். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு எழுதும் போது பசும்பொன் உடன் இருந்தார் என்றால் இல்லை. 12.10.2023 அன்று பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்ததாக கூறுவது பொய் என்றும், பிரதிவாதி எனக்கு எவ்வித கடனுறுதிசீட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் பசும்பொன் வட்டி தொகையை வசூல் செய்து கொடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டதால் பிரதிவாதி மீது பொய்யாக இந்த வழக்கு உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அசல் ஆவணத்தில் உள்ள சுமதி என்ற கையெழுத்தும், வா.சா.ஆ.1-ல் கடனுறுதிசீட்டில் உள்ள சுமதி என்ற கையெழுத்தும் வித்தியாசம் உள்ளதா என்று கேட்டால் வித்தியாசம் உள்ளது ஆனால் அசல் ஆவணத்தில் உள்ள சுமதி யார் என்று எனக்கு தெரியாது. உண்மையிலேயே நான் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை என்றும் அந்த சமயத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.